**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 87/2020 |
| Name | : Guberan |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை அலங்காநல்லூரில் வசித்து வருகிறேன். ஆசாரி வேலை செய்கிறேன். 19.07.2020 ம் தேதி இரவு 07.15 மணி அளவில் ரகமத் சா மில்லில் வேலை செய்து கொண்டிருந்த போது என்னுடன் வேலை செய்யும் குணசேகரன் சாப்பிட போகிறேன் என்று நடந்து மடத்துக்குளம் – உடுமலை ரோட்டை கடந்து மறு பக்கம் சென்ற போது மேற்கிலிருந்து வேகமாக வந்த Yamaha FZ TN 78 R 9200 இருசக்கர வாகனம் வந்து மோதியதில் அவருக்கு இரண்டு கைகள் மற்றும் முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். சம்பவத்தின் போது அவர் பெயரை கேட்டேன் சந்தோஷ் என்று சொன்னார். ஆம்புலன்ஸ் வரவழைத்து அதில் நான் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு குணசேகரனை அழைத்துச் சென்றேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் நான் உடன் சென்றேன். அந்த சமயத்தில் என்னுடன் இருந்த சா மில் வாட்ச்மேன் வேலு இது சம்மந்தமாக புகார் கொடுத்தார். அவர் தற்போது இறந்துவிட்டார்.

குணசேகரன் இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்து பின்பு இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) விபத்தில் இறந்து போன நபர் என்னுடன் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். அவர் எந்த திசையில் இருந்து எந்த திசைக்கு வந்தார் என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையை கடந்தார். எதிரி எந்த திசையில் வந்தார் என்றால் மேற்கிலிருந்து கிழக்காக வந்தார். மடத்துக்குளம் – உடுமலை சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். சுமார் 60 – 70 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். பெரிய ரோடு தான். இறந்து போன நபர் சாலையை திடீரென்று கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல இருசக்கர வாகனம் அதிவேகமாக வந்ததால் விபத்து ஏற்பட்டது. மோதியதில் குணசேகரன் தூக்கி வீசப்பட்டார்.

(2) மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும் வாகனத்திற்கு இடது திசை என்பது சாலையில் வடக்கு பக்கம் என்றால் சரிதான். எதிரி இடது திசையில் தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். சாலையின் எந்த பக்கம் விபத்து ஏற்பட்டது என்றால் சென்டருக்கு வடக்கு பக்கம் விபத்து நடந்தது. தெற்கிலிருந்து வடக்கே வந்தவர் வாகனம் வருவதை பார்த்து நின்றிருந்தால் விபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நிற்பதற்கு கூட வாய்ப்பில்லாத அளவிற்கு எதிரி வேகமாக வந்தார். அந்த சமயத்தில் கொரோனா ஊரடங்கு உத்திரவு காரணமாக ஞாயிற்றுக் கிழமையில் வேறு வாகனம் எதுவும் வரவில்லை இந்த வாகனம் மட்டும் தான் அந்த சமயத்தில் வந்தது.

(3) பொதுவாக தேசிய நெடுஞ்சாலையை கடப்பவர்கள் நின்று நிதானமாக வாகனம் வருவதை பார்த்து கடக்க வேண்டும் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபர் உடன் வேறு யார் வந்தார்கள் என்றால் அவர் மட்டும் தான் சாலையை கடந்தார். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மருத்துவமனையில் இருக்கும் போது அலைபேசியில் விசாரித்தார்கள் பின்பு காவல் நிலையத்தில் வைத்து நேரில் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நானும், இன்னொரு நபரும் அந்த சமயத்தில் அங்கு இருந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம்.

(4) இரு சக்கர வாகனத்திற்கு என்ன சேதம் ஏற்பட்டது என்றால் நான் அதை பார்க்கவில்லை. சம்பவம் சம்மந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்றால் வாட்ச்மேன் வேலு அண்ணன் கொடுத்தார். நான் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்வது பொய் என்றும், இறந்து போனவர் என்னுடன் வேலை செய்யும் நபர் என்பதால் நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன நபரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி சரியான திசையில் மிதமான வேகத்தில் தான் வந்தார் என்றால் சரியல்ல. வேகமாக வந்து மோதினார்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.14 16:16:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 87/2020 |
| Name | : | Selvi |
| P.W. | : | 2 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பெருமாள் புதூரில் வசிக்கிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். விபத்தில் இறந்து போன குணசேகரன் எனது கணவர். 19.07.2022 ம் தேதி நான் மடத்துக்குளத்தில் வீட்டில் இருந்த போது குபேரன் போன் செய்து எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் அங்கு செல்வதற்குள் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டார்கள். அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். நான் மறு நாள் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். 4 நாட்கள் சிகிச்சையில் இருந்து இறந்துவிட்டார். போலீசார் பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். குபேரன் அழைத்து சொன்ன பின்பு தான் சம்பவம் பற்றி தெரியும். யாருடைய கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.14 16:16:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்